50889

சுருக்கம்

காவல்துறை – ஒவ்வொரு மாவட்டத்திலும் 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் காவலதுறைப் பணியாளர்கள் மற்றும் காவல துறை அமைச்சுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு பரிசுத் தொகை மற்றும் மேற்படிப்பு உதவி தொகை உயர்த்தி வழங்குதல் ஆணை வெளியிடப்படுகிறது.

உள்(கா.3) துறை

அரசு ஆணை(பத்தாண்டு)எண்.837

நாள்: 18.07.08

படிக்க:

1. அரசு ஆணை(நிலை) எண் 1287, உள்(காவல் 9) துறை நாள் 24.08.1993.
2. அரசு ஆணை(நிலை) எண்.304, உள்(கா.9) துறை நாள் 27.05.1997
3. அரசு ஆணை(நிலை) எண்.1576, உள(காவல்.9) துறை நாள் 24.11.1999.
4. அரசு ஆணை(நிலை) 822, உள்(காவல்.9) துறை நாள் 31.07.2000
5. காவல் துறை தலைமை இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.97084/த.நா.கா.சே.ந.நி(2)/2008 நாள் 30.05.2008 மற்றும் 06.06.2008.

**ஆணை:**

********

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12.05.2008 அன்று சட்டப்பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை எண்.22 விவாதத்திற்கு பதில் அளித்து அறிவித்த அறிவிப்புகளில் கீழ்காணும் அறிவிப்பும் ஒன்றாகும்.

"ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டத்திற்கு அரசு 50 இலட்சம் ரூபாய் மானியம் அளித்து வருகிறது. மேலும், மாவட்ட அளவில் அரசுப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் முதலிடம் பெறும் காவலர்களின் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் அரசு நிதி ஒதுக்கீட்டிலிருந்து பரிசுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மூன்றாவது காவல் ஆணையத்தின் பரிந்துரையையொட்டி இத்திட்டத்தில் பின்வரும் மாற்றங்களை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

1) "ஒவ்வொரு மாவட்டத்திலும் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறும் காவல்துறை பணியாளர்களின் குழந்தைகளுக்கு 10ம் வகுப்புக்குத் தற்போது வழங்கப்படும் 3 பரிசுகளை 10 பரிசுகளாகவும், 12ம் வகுப்புக்குத் தற்போது வழங்கப்படும் 3 பரிசுகளை 10 பரிசுகளாகவும் உயர்த்தி வழங்கப்படும்; பரிசுத் தொகைகளும் உயர்த்தி வழங்கப்படும்."

2) மேலும் காவலர் குழந்தைகளின் மேற்படிப்பிற்கு அளிக்கப்படும் உதவித் தொகையானது தற்போது அவர்களின் உயர்படிப்பின் மொத்த காலத்திற்கும் சேர்த்து முதல் மதிப்பெண் வாங்குபவர்களுக்கு 4 தவணைகளில் 40 ஆயிரம்

சேர்த்து முதல் மதிப்பெண் வாங்குபவர்களுக்கு தவணைகளில் 40 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் இடத்திலிருந்து ஒன்பதாம் இடம் வரை மதிப்பெண் பெறுபவர்களுக்கு நான்கு தவணைகளில் 20 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம் ஒன்பது பேருக்கு வழங்கப்படுகிறது. இனிமேல், இந்த உதவித் தொகை பெற விண்ணப்பம் அளிப்பவர்களில், அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவர்களுக்கு ஆண்டுக்கு அவர்கள் செலுத்தும் கல்விக் கட்டணமோ அல்லது 20 ஆயிரம் ரூபாயோ இதில் எது குறைவோ அந்தத் தொகை அவர்கள் மேற்படிப்பு முடியும் வரை அளிக்கப்படும்.

3) சீரமைக்கப்பட்ட இந்தத் தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டத்திற்கான அரசின் பங்கு ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் ரூபாயிலிருந்து 1 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்."

2. பார்வை 5–ல் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் காவல்துறை தலைமை இயக்குநர் அவர்கள் இவ்வறிவிப்புகளுக்கு பின்வருமாறு செயற்குறிப்புகளை சமர்ப்பித்துள்ளார்:-

அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் காவல் துறைப் பணியாளர்கள் மற்றும் காவல்துறை அமைச்சுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு தற்போது வழங்கப்படும் பரிசு தொகையை உயர்த்தி 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.6000–யிலிருந்து ரூ.6,500– ஆகவும் ரூ.4000–யிலிருந்து ரூ4500– ஆகவும் ரூ.2000–யிலிருந்து ரூ.2500– ஆகவும் மூன்று பரிசுகளும் வழங்கலாம் என்றும், அதே போல 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசு தொகையை உயர்த்தி ரூ.7000–யிலிருந்து ரூ.7500– ஆகவும் ரூ.5000–யிலிருந்து ரூ.5500– ஆகவும் ரூ.3000–யிலிருந்து ரூ.3500– ஆகவும் மூன்று பரிசுகளும் வழங்கலாம். மேலும் புதியதாக 10–ஆம் வகுப்புக்கு 7 பரிசுகள் அதாவது நான்கு முதல் பத்து பரிசுகளுக்கு ரூ.1500–யிலிருந்து ரூ.2000/– வீதமும், 12 ஆம் வகுப்புக்கு 7 பரிசுகள் அதாவது நான்கு முதல் பத்து பரிசுகளுக்கு ரூ.2000/–லிருந்து ரூ.2500/–வீதமும் உயர்த்தி வழங்கலாம்

ஆ) தமிழ்நாடு சிறப்பு கல்வி உதவித் தொகை திட்டம் தமிழ்நாடு காவலர் நூற்றாண்டு கல்வி கொடை திட்டத்தின் கீழ் இணைத்து இனிமேல் இந்த உதவித் தொகை பெற விண்ணப்பம் அளிப்பவர்களில், அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவர்களுக்கு ஆண்டுக்கு அவர்கள் செலுத்தும் கல்விக் கட்டணமோ அல்லது 20 ஆயிரம் ரூபாயோ இதில் எது குறைவோ அந்தத் தொகை அவர்கள் மேற்படிப்பு முடியும் வரை வழங்கலாம்.

இ) அதற்கு மேல் விண்ணப்பிப்பவர்களுக்கு எப்பொழுதும் போலவே அவர்களது மேல் படிப்பை கணக்கில் எடுத்துக் கொண்டு பெறப்படும் அனைத்து விண்ணப்பங்களுக்கும் தலா ரூ.3000/– முதல் ரூ.5,500/– வரை ஒவ்வொரு ஆண்டும் வழங்கலாம்.

ஈ) காவல்துறை பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி தொகை கொடை வழங்க வேண்டி தற்போது வழங்கப்படுகின்ற ரூ.50 இலட்சம் கருணை கொடையை ரூ.1 கோடியாக உயர்த்தி 2008 ம் ஆண்டு முதல் வழங்கலாம்.

3. காவல்துறை தலைமை இயக்குநரின் செயற்குறிப்புகளை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து சிறப்பு படிப்பு உதவி திட்டத்தின்கீழ் உயர்கல்வி படிப்பிற்கு முதல் 100

குழந்தை படிப்புதவித் தொகை வழங்கப்பட்ட போது, விண்ணப்பம் சமர்ப்பித்துள்ள எஞ்சிய குழந்தைகளுக்கு ரூ.3000-லிருந்து ரூ.9500/- வரை ஒரு முறை உதவித் தொகை வழங்குவது தொடர்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட சிறப்பு அறிவிப்புகளிலோ அல்லது மூன்றாவது காவல் ஆணையத்தின் பரிந்துரைகளிலோ செய்து எடுக்கப்பட்ட முடிவுகளிலோ குறிப்பிடப்படவில்லை. எனவே இது தொடர்பாக ஆணைகள் எதுவும் வெளியிட வேண்டாம் என்று அரசு முடிவு செய்கிறது. தமிழ்நாடு காவல் கருணைக் கொடை நிதிக்கு அரசின் உதவித் தொகை ரூ.1 கோடியாக உயர்த்தி வழங்கப்படுவதால் மாணவ / மாணவிகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை, படிப்புதவித் தொகை அனைத்தும் அரசு கணக்கிலிருந்து வழங்கப்படாமல் தமிழ்நாடு காவல் கருணைக் கொடை நிதியிலிருந்து வழங்கலாம் என்றும் அரசு முடிவு செய்கிறது.

4. அம்முடிவுகளுக்கேற்ப காவல்துறை பணியாளர்களின் குழந்தைகளுக்கு 10 மற்றும் 12வது வகுப்பு மாணவ / மாணவிகளுக்கு பரிசுத் தொகை மற்றும் மேற்படிப்பு உதவித் தொகை வழங்குவது சம்மந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12.05.2008 அன்று சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது அறிவித்த அறிவிப்பிற்கிணங்க, அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது.

(i) ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் காவல்துறைப் பணியாளர்கள் மற்றும் காவல் துறை அமைச்சுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு பரிசுத் தொகையினை பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும்.

| 10-ம் வகுப்பு | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.6500/- |
| இரண்டாம் பரிசு | ரூ.4500/- |
| மூன்றாம் பரிசு | ரூ.2500/- |
| நான்கு முதல் பத்து வரை 7 பரிசுகள் | ரூ.2000/- |

| 12-ம் வகுப்பு | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.7500/- |
| இரண்டாம் பரிசு | ரூ.5500/- |
| மூன்றாம் பரிசு | ரூ.3500/- |
| நான்கு முதல் பத்து வரை 7 பரிசுகள் | ரூ.2500/- |

(ii) சிறப்பு படிப்புதவித் திட்டத்தை மாற்றியமைத்து, உதவித் தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவர்களுக்குத ஆண்டுக்கு அவர்கள் செலுத்தும் கல்விக் கட்டணமோ அல்லது 20 ஆயிரம் ரூபாயோ இதில் எது குறைவோ அந்தத் தொகை அவர்கள் மேற்படிப்பு முடியும் வரை வழங்கப்படும்.

(iii) மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை மற்றும் படிப்புதவித் தொகை தொடர்பாக அனைத்து செலவினங்களையும் அரசு கணக்கில் இல்லாமல் தமிழ்நாடு காவலர் கருணைக் கொடை நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

(iv) தமிழ்நாடு காவலர் கருணைக் கொடை நிதிக்கு அரசின் பங்களிப்பாக ரூ.1 கோடி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(v) தமிழ்நாடு காவல்துறை அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் தொகுப்பு நிதி பங்குத் தொகையாக வழங்கப்பட்ட ரூ.10.00 இலட்சம் தொகையில் எவ்வித செலவினமும் மேற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.

5. மேலே பத்தி 4(iv)–இல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2055–00– காவல் 113 காவல்துறை பணியாளர் நலன்–I திட்டத்தில் சோதது ஏசி காவலர் நலனுக்கு உதவி –10- பங்குத்தொகைகள் –01 குறிப்பிட்ட நிதிக்கு தொகை கொடுத்தல் (DPC-No 2055-00-113-AC-1016)

6. இச்செலவினம் ஒரு புதுத் துணைப் பணி குறித்ததாகும். இதற்கு சட்டப் பேரவையில் பின்னர் ஒப்புதல் பெறப்படும். சட்டப் பேரவையில் இதற்கு ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பணத்தை அனுமதிக்கின்ற ஆளுநர்கள் நிதி (வரவு செலவு பொது I) துறையால் தனியாக பிறப்பிக்கும் எதிர்பாரா செலவு நிதியாகும். முன்பணம் வாங்குவதற்கான விண்ணப்பத்தை உரிய படிவத்தால் இருப்புகளில் நிதி (வரவு செலவு பொது I) துறைக்கு அனுப்பிவைக்கும்படி காவல்துறை தலைமை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இத்திட்டத்தின் மூலம் செயல்படுவதற்கு தேவையான மொத்த மதிப்பீடு இந்த நிதியாண்டிற்கு எவ்வளவு என்றும் குறிப்பிட்டு ஒரு வரைவு விளக்கக் குறிப்பு அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

7. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலோடு அத்துறையின் அ.சா.எண்.43519 Fin.Home.1/2008-1, நாள் 17.07.2008–இல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.431(நானூற்று முப்பத்து ஒன்று)

(BY ORDER OF THE GOVERNOR)

S.MALATHI
Principal Secretary to Governmer

பெறுநர்
காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை–4
அனைத்து காவல்துறை ஆணையர்கள்.
அனைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்.
அனைத்து சிறப்புக் காவல் அணி தளவாய்கள்.

மாநில கணக்காயர், சென்னை – 18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 79
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 9
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 5
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், கோயம்புத்தூர்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்.
நகல்
முதலமைச்சரின் செயலர், சென்னை – 9
நிதித்துறை, (வ.செ.பொது.1 / வ.செ.பொது.2 / உள்துறை),
சென்னை – 9

**// FORWARDED BY ORDER//**

SECTION OFFICER